மாங்காடு நகர 23-வது வார்டு, அண்ணா தெரு, மேல் தெரு ஆகிய பகுதிகளை சார்ந்த 50-க்கும் மேற்பட்ட மாற்று கட்சி இளைஞர்கள் அக்கட்சிகளில் இருந்து விலகி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் தி.மு. கழகத்தில் இணைந்தனர். அருகில் மாங்காடு நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக துணை பொது செயலாளர் திருச்சி சிவா, கலாநிதி வீராசாமி எம்.பி. ஆகியோர் நலத்திட்ட உதவிகள் பெண்களுக்கு தையல் மிஷின் வழங்கினர். இதில் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் தி.நகர் எஸ்.மோகன், வீ.கவி கணேசன், குறிஞ்சி எஸ்.கணேசன், வி.ராமநாதன், சாந்தி பக்தன், டி.ஏ.ராஜ் ஆர்.சி.ஆசைதம்பி, எம்.வி.குமார், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், த.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குருத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள்டிவி எம்.ராஜா ஆர்.சந்தர், எஸ்.பாஸ்கர், பி.எஸ்.சைலஸ், ஆர்.ரஜினிபாபு, ஒய்.ரஜினிநந்தி, ஆர்.டில்லி, ஆர்.தினேஷ்குமார், முருகா எஸ்.ஆறுமுகம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாம் – கடந்த வாரம்வரை

737 முகாம்கள் நடத்தப்பட்டு - 11,42,055 பேர் பயன்பெற்றுள்ளனர்!

சைதாப்பேட்டையில் – மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்து – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, டிச.22- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாம் - கடந்த வாரம் வரை 737 முகாம்கள் நடத்தப்பட்டு 11,42,055 பேர் பயன் பெற்றுள்ளார்கள் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமினை ஆய்வு மேற்கொண்டு தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (20.12.2025) சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காரணீஸ்வரர் திருக்கோவிலில், சமுதாய பொருளாதார தொண்டு மன்றம் சார்பில் நடத்தப்பட்ட மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் தொடர்பாக

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆகஸ்ட் திங்கள் 2ஆம் தேதி சென்னையில் ஒரு மிக பெரிய வகையிலான புதிய மருத்துவ திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். நலம் காக்கும் ஸ்டாலின் என்கின்ற திட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாடு முழுவதிலும் இருக்கின்ற அனைத்து வட்டாரங்களிலும் வட்டாரத்திற்கு 3 என்கின்ற வகையிலும் சென்னை பெருநகராட்சியில் 15 இடங்களில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநராட்சிகளில் தலா 4 என்கின்ற வகையிலும், 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட மாநகராட்சிகள் 19 வட்டாரங்களிலும் தலா 3 என்கின்ற வகையிலும், 1,256 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த முகாம்களைப் பொறுத்த வரை நலம் காக்கும் ஸ்டாலின் என்கின்ற முகாம் மட்டுமல்லாமல் முழு உடல் பரிசோதனை என்கின்ற வகையில் இன்றைக்கு தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு இடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. அந்த வகையில் இந்த வாரம் 22-வது முறையாக நடைபெற்று வருகிறது. இன்று சென்னையோடு இணைந்து 32 மாவட்டங்களில், 45 இடங்களில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்கள் நடைபெற்று வருகிறது.

கடந்த வியாழக்கிழமையோடு சேர்த்து இதுவரை 737 முகாம்கள் நடத்தப்பட்டு, இதன் மூலம் முழு உடல் பரிசோதனை என்கின்ற வகையில் முழுமையாக மருத்துவ பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை 11,42,055 பேரும் முழு உடல் பரிசோதனை என்கின்ற வகையில் மகத்தான பலனைப் பெற்றுள்ளனர்.

முதலமைச்சர் அவர்களின் நலம் காக்கும் ஸ்டாலின் என்கின்ற சீரிய திட்டத்தில் இந்த முகாம்களில் பயன்பெறுபவர்கள் அங்கிகரிக்கபட்ட காப்பீட்டு திட்டத்திற்கான அட்டைகளையும் உடனடியாக பெற்று செல்கிறார்கள். அவர்கள் மட்டுமே இந்த முகாம்களின் வாயிலாக 34,933 பேர் பயன் பெற்றுள்ளனர். மாற்றுத்திறனாளிகளுக்கும் அந்த இடங்களில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் பயன் பெற்றுள்ள மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை 43,978 நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் என்ற திட்டத்தை பொறுத்தவரை தமிழ்நாட்டில் 38 மாவட்டங்கள் இருந்தாலும் இதில் 6 மாவட்டங்களில் தற்போது வரை இந்த பணி முடிவு பெற்றுள்ளது.

நீலகிரி, மயிலாடுதுறை, பெரம்பலூர், காஞ்சிபுரம், திருப்பத்தூர், மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 6 மாவட்டங்களில் இந்தபணி முழுமையாக முடிவு பெற்றுள்ளது. மீதமுள்ள 32 மாவட்டங்களில் இப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சிறப்பு மருத்துவ சேவைகள்

இந்த முகாம்களை பொருத்தவரை பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மன நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், நீரிழிவு மருத்துவம், கதிரியக்கவியல் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சித்தா மற்றும் இந்தியமுறை மருத்துவம் என்று 17 வகையான மருத்துவம் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமில் வழங்கப்பட்டு வருகிறது.

இதை பொறுத்தவரை அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் முழு உடல் பரிசோதனைகள் செய்யப்பட்டு அவர்களுக்கான நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தில் பதிவு செய்தல் போன்ற பல்வேறு பணிகள் இம்முகாமில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த முகாம்களில் நான் பள்ளிக்கரணையில் நடைபெறும் முகாமுக்கு சென்று ஆய்வு செய்ய உள்ளேன்.

இந்த நிலையில் இன்று காலை சைதாப்பேட்டையில் சமுதாய பொருளாதார மன்றம் காரணீஸ்வரர் தேவஸ்தானம் சார்பிலும் இங்குள்ள செங்குந்தர் பேரவை சார்பிலும் சமுதாய பொருளாதாரம் என்கின்ற அமைப்பு இப்பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு குறிப்பாக தேரடி தெரு, சுப்பிரமணிய முதலியார் தெரு, காரணீஸ்வரர் கோவில் தெரு, அதே போல் கூத்தாடும் பிள்ளையார் கோவில் தெரு, வாதியார் வி.எஸ். சுப்பராயன் தெரு போன்ற பல்வேறு சாலைகள் இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன் பெறுகின்ற வகையில் ஒரு மருத்துவ முகாம் இங்கே நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் அப்பலோ மருத்துவமனை சார்பில் பல்வேறு துறைகள் உள்ளடங்கிய மருத்துவ முகாம் தற்போது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

சமுதாயத்தின் பெரியவர்கள் இந்த முகாமில் பங்கேற்று பொதுமக்களுக்கு சேவையாற்ற தொடங்கி இருக்கிறார்கள். இந்த முகாமை பொருத்தவரை 1000க்கான மக்கள் பயன் பெறுகின்ற வகையில் இந்த முகாம்கள் தற்போது மிகச் சிறப்பாக தொடங்கப்பட்டிருக்கிறது.

செவிலியர்கள் போராட்டம் தொடர்பான கேள்விக்கு

நேற்று செவிலியர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அவர்களின் ஒரு சில கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அதில் ஒரு கோரிக்கை தற்போதைய சூழலில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. ஏனென்றால் காலிப்பணியிடங்களே இல்லாத நிலை தற்போது உள்ளது. ஒரு 169 காலிப்பணியிடங்கள் மட்டுமே இருந்தது. அதையும் இன்னும் 2 நாட்களில் நிரப்பட்டுவிடும். எனவே ஒப்பந்த அடிப்படையிலான செவிலியர்களுக்கு, நிரந்த செவிலியர் காலிப்பணியிடங்களே இல்லாத நிலையில் அவர்களுக்கு நிரந்தர செவிலியர் பணியிடங்கள் வழங்க இயலாது.

தமிழ்நாடு முதல்வர் அவர்களின் தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இதுவரை 3,614 நபர்களுக்கு பணி ஆணைகள் தரப்பட்டுள்ளது. 1,200 புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. 2021ல் 251 பேர்களுக்கும், 2022ல் 678 பேர்களுக்கும், 2023ல் 489 பேர்களுக்கும், 2024ல் 1,694 பேர்களுக்கும் 2025ல் 502 பேர்களுக்கும், தற்போது ஒரு 169 பேர்களுக்கும் பணி ஆணைகள் தரப்படவிருக்கிறது. இதுவரை ஒப்பந்த செவிலியர்களாக இருப்பவர்களை நிரந்த செவிலியர்களாக நியமனம் செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 3,783. இன்னும் 8,322 பேர் ஒப்பந்த செவிலியர்களாக இருக்கிறார்கள். நமது ஆட்சிக்கு முன்பு வரை இவர்களுக்கு சம்பளம் ரூ.14,000 ஆகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு ரூ.4,000 சம்பளம் உயர்த்தப்பட்டு ரூ.18,000ஆக வழங்கப்பட்டது. இந்த 8,322 பேர்களுக்கும் காலிப் பணியிடங்கள் உருவாகும்போது மூப்பின் அடிப்படையில் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள்.

மேலும், நேற்று சொன்னது போல் அவர்களுக்கு இந்த பணி ஆணைகள் வழங்கும் போதே அந்த பணி ஆணையிலேயே She/he is cannot claim as a right for regular post in the time scale of pay on completion of two years of service. She/he will be absorbed into regular time scale of pay as and when vacancies arise according to the seniority of selection என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பணி ஆணையிணை வைத்துக் கொண்டே அவர்கள் போராடுகிறார்கள் என்பது தான் வருத்தமாக இருக்கிறது. நேற்றைக்கு கூட நான் சொன்னேன் போராடுவது என்பது தொழிலாளர்களுடைய அல்லது பணியாளர்களுடைய அடிப்படை உரிமை மற்றும் ஜனநாயக உரிமை என்றாலும் கூட எந்த மாதிரியான வாய்ப்புகள் இருக்கிறது என்பதை உணர்ந்து, அல்லது சம்பந்தப்பட்ட நிர்வாகத்துடன் பேசி முடித்து பேச்சுவார்த்தைக்கு பிறகு போராட்டங்களை நடத்துவது என்பது நல்லது.

மருத்துவத்துறை என்பது ஏதேனம் ஒரு மருத்துவரோ அல்லது செவிலியரோ ஒரு மணி நேரம் இல்லாமல் போனால், அந்த ஒரு மணி நேரத்தில், அரை மணி நேரத்தில் எந்த மாதிரியான பாதிப்புகள் பொது மக்களுக்கு ஏற்படுகிறது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்கிற வகையில் நேற்றைக்கு அவர்களிடம் சொல்லப்பட்டிருக்கிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழு தலைவர் கிருஷ்ணமூர்த்தி, தன்னார்வ தொண்டு நிறுவன அலுவலர்கள், பொதுமக்கள் பலர் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டில்

எந்தவித பிரிவினைவாதத்திற்கும் எங்கள் முதல்வர் இடம் கொடுக்கமாட்டார்!

துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, டிச. 22- இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் (20.12.2025) அன்று சென்னை, திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி திருக்கோயிலில் தமிழ்நாடு அரசு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 108 மாணவ, மாணவியர் ஆண்டாள் நாச்சியார் அருளிய திருப்பாவை பாசுரங்களை பாராயணம் செய்தனர். அதனைத் தொடர்ந்து அமைச்சர் அவர்கள் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து பல்வேறு துறை அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு அறிவுரைகளை வழங்கினார்.

முன்னதாக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் திருவான்மியூர் அருள்மிகு பாம்பன் குமரகுருதாசர் சுவாமிகள் திருக்கோயிலில் நடைபெற்ற 102ஆம் ஆண்டு மயூரவாகன சேவன விழாவினை முன்னிட்டு, பாம்பன் சுவாமிகளால் எழுதியருளப்பட்ட 6,666 பாடல்கள் அடங்கிய தொகுப்பான "ஞான பானு ஒளி" என்ற நூலினை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து அருள்மிகு பாம்பன் சுவாமி திருக்கோயிலில் பணியாற்றி பணிக்காலத்தில் உயிரிழந்த பணியாளரின் வாரிசுதாரர் ஒருவருக்கும், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் திருக்கோயிலில் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த 2 பணியாளர்களை பணிவரன்முறை செய்து அதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றபிறகு, திருக்கோயில்களில் பக்தர்கள் இறை வழிபாட்டிற்கு மேலும் ஊக்கத்தையும் மகிழ்ச்சியையும் தருகின்ற வகையில் பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் அன்னைத் தமிழுக்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில் தமிழில் அர்ச்சனையை அனைத்து திருக்கோயில்களிலும் நடைமுறைப்படுத்தியது. 13 போற்றி புத்தகங்களை வெளியிட்டது. தமிழில் அர்ச்சனை செய்யும் அர்ச்சகர்களின் பெயர் மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அறிவிப்பு பதாகைகள் வைக்கப்பட்டுள்ளது. மாதந்தோறும் பௌர்ணமி நாளான்று 108 சுமங்கலி பெண்கள் பங்கேற்கும் திருவிளக்கு பூஜை 25 திருக்கோயில்களில் நடைபெற்று வருகிறது. இந்த பூஜையின் மூலம் இதுவரை 82,000 சக்திகள் பயன் பெற்றுள்ளனர். இதனை அமைதியான ஆன்மிகப் புரட்சி என்று கூட சொல்லலாம்.

தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழக மாணவ, மாணவியரை கொண்டு கந்தசஷ்டி காலங்களில் முருகன் திருக்கோயில்களில் கந்த சஷ்டி பாராயணமும், மார்கழி மாதத்தில் வைணவத் திருக்கோயில்களில் திருப்பாவை பாராணமும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. 4 ஆம் ஆண்டாக இன்றைய தினம் திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் திருப்பாவை பாராணம் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தோம். நினைத்ததை நடத்தி தரும் நிறைவான வழிபாடு என்ற தலைப்பில் இந்தாண்டு முதல் சிவன் திருக்கோயில்களில் திருவெம்பாவை பாராயணம் மற்றும் கூட்டு வழிபாடு நடைபெற்று வருகிறது. கடந்த 16ஆம் தேதி முத்தையால்பேட்டை, அருள்மிகு மல்லிகேஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற திருவெம்பாவை கூட்டு வழிபாட்டை தொடர்ந்து, இன்றைய தினம் கந்தகோட்டம் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில், அருள்மிகு கச்சாலீஸ்வரர் திருக்கோயில், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், அருள்மிகு சென்ன மல்லீஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நடைபெறுகின்றது. இப்படிப்பட்ட கூட்டு வழிபாட்டில் ஜாதி, மதத்திற்கு அப்பாற்பட்டு இஸ்லாமிய சமூகத்தினர் கூட பங்கேற்ற அற்புத நிகழ்வு நடந்தது. பக்தர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடையும் வகையில் புதிய திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஊக்கமளித்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இத்தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

70 வயதை கடந்த மூத்தக் குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிக்கென வைகுண்ட ஏகாதசி நாளான்று காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரையிலும், பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை சிறப்பு தரிசனத்திற்கு நேரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவர்களுக்கு உதவிடும் வகையில் 4 செயல் அலுவலர்கள் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR) பட்டியலை பொறுத்தவில் அதிலுள்ள சிறு பிரச்சனைகளை களைய வேண்டும் என்பதில் முதலமைச்சர் அவர்கள் உறுதியாக நின்றார். அதாவது, வாக்களிக்கின்ற உரிமை இருக்கின்ற எவரும் வாக்காளர் பட்டியல் இடம் பெறாமல் இருக்கக் கூடாது, வாக்களிக்க தகுதி இல்லாத யாரும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று இருக்கக் கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தாரக மந்திரமாகும்.

இந்த தீவிர திருத்தம் மேற்கொள்வதற்கு முன்பே தமிழ்நாடு முழுவதும் பாகம் வாரியாக முகவர்களை நியமித்த ஒரே இயக்கம் திமுக மட்டும்தான். அதேபோல 10 பாகங்களுக்கு ஒரு வழக்கறிஞரை நியமித்து திமுக வழக்கறிஞர் பிரிவு செயலாளர் என்.ஆர். இளங்கோவன் அவர்கள் தலைமையில் வகுப்பு எடுத்து உரிய பயிற்சி அளித்து அனைத்து முகவர்களையும் பட்டை தீட்டிய வைரங்களாக வைத்திருக்கின்றோம். வாக்காளர் பட்டியல் முழுமையாக வெளியான பின் எங்கள் முகவர்கள் களத்திற்கு சென்று வாக்களிக்கின்ற உரிமையுள்ள எவரையும் விடுபடாமல் பாதுகாப்போம்.

நீதிமன்ற உத்தரவிற்கு பணிந்து சட்டத்தின் ஆட்சி நடைபெறுகின்ற மாநிலம் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இருக்கின்ற தமிழ்நாடு மட்டும்தான்.

திருக்கோயில் நிலங்களில் 50 ஆண்டுகளாக குடியிருப்பவர்களின் வாழ்வாதாரத்தை கணக்கிட்டு நீதிமன்ற உத்தரவை செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தினால் தான் சில நீதிமன்ற உத்தரவுகள் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படுகின்றதே தவிர மறுக்கப்படுவதில்லை. நிச்சயமாக நீதிமன்ற உத்தரவை ஏற்று மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு உத்தரவுகள் செயல்படும்.

திருச்செந்தூர், பழனி, திருப்பரங்குன்றம் போன்ற முருகன் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தியதோடு, 27 நாடுகளைச் சேர்ந்த முருக பக்தர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை நடத்தி காட்டி தமிழ் கடவுள் முருகப் பெருமானின் புகழுக்கு புகழ் சேர்த்து ஆட்சி இந்த ஆட்சியாகும். இது அனைத்தையும் முருகப் பெருமான் உணர்ந்து எங்கள் முதலமைச்சரோடு கைக்கோர்த்து கொண்டிருக்கிறார். எந்த சக்தியாலும் முருகரிடமிருந்து எங்களை பிரிக்க முடியாது. இனத்தால், மதத்தால், மொழியால் மக்களை பிளவுபடுத்த வேண்டும் என்று நினைக்கின்றார்களை இந்தியாவின் இரும்பு மனிதன் என்ற போற்றப்படும் சர்தார் வல்லபாய் பட்டேலின் உறுதியும், நெஞ்சுரமும் கொண்ட திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் எங்கள் முதலமைச்சர் இருக்கின்ற வரையில் எந்த பிரிவினைவாதத்திற்கும் இடம் தர மாட்டார் என்பது சீமான் அவர்களுக்கு தெரியும். அரசியலுக்காக, பேட்டிக்காக, அரசியல் களத்திற்காக திமுகவை இணைத்து கொள்கிறார் திமுகவை பொறுத்தளவில் எல்லோருக்கும் எல்லா நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றோம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., தமிழ்நாடு தகவல் ஆணையர் டாக்டர் கே. திருமலைமுத்து, ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர் செ. ராஜேந்திரன், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் திருமதி கி. ரேணுகாதேவி, சு. மோகனசுந்தரம், திருமதி ஜ. முல்லை, துணை ஆணையர் திருமதி சி.நித்யா, பல்கலைக்கழக பேராசிரியை திருமதி நிரஞ்சனா, உதவி ஆணையர்கள் கி. பாரதிராஜா, க. சிவக்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.61 தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்

1.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம்-உடற்பயிற்சிக் கூடம்-நவீன ஆடுகளம்!

இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

சென்னை, டிச.22- கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.61, டாக்டர் சந்தோஷ் நகர் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு வளாகத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 1.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம், உடற்பயிற்சிக் கூடம் மற்றும் செயற்கை புல்தரை ஆடுகளம் கட்டும் மூன்று திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

எழும்பூர், டாக்டர் சந்தோஷ் நகர் குடியிருப்பு வளாகத்தில் சிதிலமடைந்த நிலையில் இருந்த அங்கன்வாடி மையத்தை அகற்றிவிட்டுப் புதிய அங்கன்வாடி மையம் கட்டித் தரவும் மற்றும் அக்குடியிருப்பைச் சேர்ந்த இளைஞர்களின் உடல் நலம், மன நலனை மேம்படுத்தும் வகையில் உடற்பயிற்சிக் கூடம், நவீன விளையாட்டுத் திடல் அமைத்துத் தரவும் வேண்டும் என அக்குடியிருப்பில் வசிப்போர் முன்வைத்த கோரிக்கையினை நிறைவேற்றும் விதமாக சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தனது தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் அக்குடியிருப்பு வளாகத்தில் அங்கன்வாடி மையம் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதற்கு 45.50 இலட்ச ரூபாயும், நவீன செயற்கை புல்தரை ஆடுகளம் அமைப்பதற்கு 95.32 இலட்ச ரூபாயும் ஒதுக்கீடு செய்து, இம்மூன்று திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிக் கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதி மா. காந்தி, அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், 108-வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி, 61-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நித்திஷ் கிரிதரன், 58 'அ' வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜ்குமார், 108-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜோ.சந்தோஷ்குமார், பிரவீன்; 77-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.பி.பார்க் சதிஷ், 77 'அ' வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.கே.எஸ்.சூர்யா, உதய நிதி; 99 'அ' வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் குணா, எழும்பூர் தெற்குப் பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் குருமூர்த்தி, ஆகியோரோடு அக்குடியிருப்பைச் சேர்ந்த பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டனர்.

படப்பை ஆ.மனோகரன் தலைமை! துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய மாணவரணி சார்பில் நல உதவிகள் - உணவு!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கி சிறப்புரை!

காஞ்சிபுரம், டிச.22 காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழக மாணவரணி சார்பில் துணை முதல்வர் அவர் களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு எழிச்சூர் ஊராட்சி அரசு நடுநிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு புத்தகப்பை, பேனா, பென்சில், இனிப்பு மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கல் நிகழ்ச்சி இன்று (22.12.2025 - திங்கள்) காலை 11 மணியளவில் எழிச்சூரில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ. மனோகரன் தலைமை வகிக்கிறார்.

ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அ.ஜமீர் வரவேற்கிறார்.

ஸ்ரீவித்யா ரஞ்சித் குமார், ஜெ.கோகுல்நாதன், நா.ஜெகதீசன், ஜெ.குணசேகரன், சே.பாலகிருஷ்ணன், இரா.பிரதீப், ரேவதி சதீஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் நல உதவிகள் மற்றும் அறுசுவை உணவை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கி சிறப்புரையாற்று கிறார்.

இதில் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், சரஸ்வதி மனோகரன், திருமுடி வாக்கம் இ. மணி, ஏ.வந்தேமாதரம், பேராசிரியர் எல்.பிரபு, உமா மகேஸ்வரி வந்தே மாதரம், வ.நந்தகோபால், சி.பார்த்தசாரதி, மு. ராஜேந்திரன், எஸ்.கர்ணன், குமதா சுமன், டி.லோகநாதன், த.ஏழுமலை, என்.வாசு, சங்கீதா வேலு, மலர்விழி தமிழ் அமுதன், வி.எஸ்.கோதண்டராமன், என்.எஸ்.இளங்கோ, கா.பா.ஆடலரசு, ரா.தீபக், மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா நடராஜன், சி.ச. இருசப்பன், ம.அசோக்குமார், ஏ.இ.பஞ்சாட்சரம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்ற னர்.

ரா.முரளி நன்றி கூறுகிறார்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2ல் 15வது வார்டில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. ரூபாய் 13 லட்சம் மதிப்பீட்டில் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய நியாய விலை கடை (ரேஷன் கடை) அமைத்துத் தந்து மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். அப்பொழுது மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர் டி. வி. ராஜா, பகுதி துணைச் செயலாளர் வ. முத்து, ரயில்வே ராமகிருஷ்ணன், மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் சங்கர், கூட்டுறவு துறை மண்டலக் கண்காணிப்பாளர் நிஷா, உணவுப் பொருள் வழங்கல் துறை அதிகாரிகள் பகுதி கழக வட்ட கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.